**கவனிக்க.**- *2006.09.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1462 - 2006 සැප්තැම්බර් 08 වැනි සිකුරාදා - 2006.09.08**

*1462 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 822 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | 822 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 828 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 816 | நானாவித அறிவித்தல்கள் | - |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, செத்தெம்பர் 15 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, செத்தெம்பர் 01 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் மதுபான குத்தகை விற்பனை - 2007

1982 ஆம் ஆண்டு ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலுள்ள மதுபான குத்தகை விற்பனையின் நிபந்தனைகளும் தற்போது நடைமுறையில் உள்ள மதுபானக் குத்தகை அனுமதிப்பத்திரம் சம்பந்தமான பொது நிபந்தனைகளின்படி நொதித்த மதுபானம் சில்லறையாக கீழ்க்காட்டப்படும் தவறணையில் 2007, சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுரிமைப்படி விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

2. கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மூலம் கேள்விப்பத்திரத்துடன் 'எப்' நிரலில் ஒவ்வொரு தவறணைக்கும் நேராக காட்டப்படும் உரிய பணத்தை வைப்புச் செய்தபடி பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொண்ட சொத்துரிமைச் சான்றிதழையும் வைத்து அனுப்பி வைக்க வேண்டும். பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொள்ளும் சொத்துரிமைச் சான்றிதழ் அச் சான்றிதழின் உப பிரிவில் அடங்கியுள்ள, அச்சான்றிதழை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட எந்த ஒரு சொத்தையும் விற்காவிட்டால் அந்த சொத்துரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு ஏற்புடையது. குத்தகைக் காலம் முடிவடைய முன்னர் சொத்துரிமைச் சான்றிதழ் ஏற்புடைய காலம் முடிவடையும் சந்தர்ப்பத்தில் பூரண குத்தகைக் காலத்திற்காகவும் ஏற்புடைய புதிய சொத்துரிமைச் சான்றிதழ் ஒன்றை கேள்வியுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் குத்தகைக் காலம் முடியும் வரை உள்ள எஞ்சிய காலத்துக்காக குறைநிரப்பு சொத்துரிமைச் சான்றிதழ் ஏற்புடைய காலம் முடிவடைய குறைந்தபட்சம் 1 மாதத்திற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

3. முத்திரை பதிக்கப்பட்ட கடித உறையில் இட்டு ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் உள்ள உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இல............ ஐக் கொண்ட மதுபான குத்தகைக்கான கேள்விப்பத்திரம் - கொழும்பு" எனக் குறிப்பிட்டு (அ) கொழும்பு பிரதேச செயலகத்தில் கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலம் அல்லது (ஆ) பதிவுத்தபாலில் கொழும்பு பிரதேச செயலாளருக்கு அனுப்புவதன் மூலம் அல்லது கீழ்க்காட்டப்படும் அட்டவணையில் ஒவ்வொரு தவறணைக்கும் நேராக காட்டப்பட்டுள்ள தினத்திலும் நேரத்திலும் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்ய வேண்டும். கேள்விதாரர் கேள்வி பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் அலுவலகத்திற்கு பிரசன்னமாகி இருத்தல் வேண்டும்.

4. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அந்த நேரத்திலேயே வாங்குபவராக அறிவிக்கப்படுவதுடன், மேற்கூறப்பட்ட மதுபான குத்தகை விற்பனை நிபந்தனைகளின்படி சிறப்புரிமை விற்பனை நிபந்தனை கைச்சாத்திடுவதற்காக குறிக்கப்படும் தொகைப் பணத்தை பிணையாக பிரதேச செயலாளருக்கு வழங்க வேண்டும்.

5. பணத்திற்கு வாங்குவதற்காக சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர் விற்பனை சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடுவதை மறுப்பதனால் அல்லது தேவைப்படும் பிணைப் பணத்தை உரிய சந்தர்ப்பத்தில் கட்டத் தவறும் பட்சத்தில் உங்களால் வைக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் இல்லாமல் போவதுடன், கேள்விதாரராக அவரது பெயர், மதுபான குத்தகைப்பத்திரம் சம்பந்தமாக குற்றவாளிகளின் பெயர் பட்டியலில் இடம்பெறக்கூடும்.

6. 2006 ஆம் வருடம் சம்பந்தமாக தற்போது மதுபானத்தவறணை வைத்திருக்கும் இடத்தையே பெற்றுக்கொள்ள முடியுமா என்பதைச் சொல்ல முடியாது. வெற்றிகரமான கேள்விதாரரினால் உரிய பிரிவினுள் பொருத்தமான கட்டிடத்தை தேடிக்கொள்ள வேண்டி இருப்பதுடன் அந்தக் கட்டிடத்துக்காக மதுபானக்குத்தகை ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டிடம் வழங்குவதற்காக பிரதேச செயலாளர் கட்டுப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளவேண்டும்.

7. எவ்வித காரணமும் காட்டாது ஒன்றை அல்லது சகல கேள்வியையும் மறுப்பதற்கு பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

8. அனுமதிக்கப்பட்ட மதுபானத்தவறணை பட்டியல் கீழே காட்டப்படுகிறது :-

| (ஏ) | (பீ) | (சீ) | (டீ) | (ஈ) | (எப்) | (ஜி) | (எச்) |
|---|---|---|---|---|---|---|---|
| தொடர் இல | பிரதேசம் | செயலகப் பிரதேசம் தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விக்காக வைப்புச் செய்ய வேண்டிய பணம் ரூபா | கேள்வி ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் | விற்பனை செய்யும் தினம் |
| 1 | இலக்கம் 5 பிரிவு கொட்டாஞ்சேனை மேற்கு (கொடபோம்) | பிரதேசம் இவ்வாறு எல்லைப் படுத்தப்பட்டுள்ளது.- வடக்கு- ஸ்கினர் வீதியில் தெற்கு பிரதேச சந்தியிலிருந்து கொடபோம் வீதி சந்தியும் லஸ்கரீன் வீதி சந்தி வரை | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2006.09.21 |

| (ஏ) தொடர் இல | (பீ) பிரதேசம் | (சீ) செயலகப் பிரதேசம் தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | (டீ) தவறணை திறக்கும் நேரம் | (ஈ) தவறணை மூடும் நேரம் | (எப்) கேள்விக்காக வைப்புச் செய்ய வேண்டிய பணம் ரூபா | (ஜி) கேள்வி ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் | (எச்) விற்பனை செய்யும் தினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | யாகும். கிழக்கு - லஸ்கரின் வீதி சந்தி வரையாகும் கிழக்கு - லஸ்கரின் வீதியிலிருந்து மேற்குபக்க ஸ்கினர் வீதி (தெற்கு) சந்தியிலிருந்து உள்ள பிரதேசமும் ஜம்பட்டா வீதியின் தெற்காக அச்சந்தியிலிருந்து ஜம்பட்டா வீதியின் வடக்கு பிரதேச கொடபோம் வீதியும் லஸ்கரின் வீதியின் சந்தி வரை உள்ள பகுதியும் மேற்குக்கு அச்சந்தியிலிருந்து கொடபோம் வீதியின் கிழக்கு பிரதேசம் ஜம்பட்டா வீதியின் சந்தியிலிருந்து ஸ்கினர் வீதி (வடக்கு) சந்தி வரை உள்ள பிரதேசமும். | | | | | |
| 2 | இல. 5 பிரிவு கொட்டாஞ்சேனை மேற்கு (ஸ்கினர்-வீதி) | அச்சந்தியிலிருந்து வடக்கு ஸ்கினெர் வீதியின் வடக்கு பிரதேசம் பிக்கரின் வீதியினதும் கொட்டாஞ்சேனை வீதியின தும் சந்தி வரையான பிர தேசம். | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2006.09.21 |
| 3. | இல. 2 பிரிவு முகத்துவாரம் | (ஏ) மேல் வீதிப் பிரதேசம் அன்றூ பிரதேச சந்திவரை அளுத்மாவத்தை வீதியும் சாந்த அன்றூ வீதியின் சந்தி வரை. (பீ) சாந்த அன்றூ வீதிப் பகுதி வரை மேல் சாந்த அன்றூ பிரதேச மும் மாசன் வீதியின் சந்தி வரை. (சீ) மோதர வீதி பகுதியும் அச்சந்தி வரை மாஷன் வீதியும் மாதம்பிட்டி வீதியின் சந்தி வரை (டீ) சாந்த ஜேம்ஸ் வீதியின் இரு பக்கங் களும் அங்குள்ள சந்தி வரை மோதர வீதியும் அளுத்மாவத்தை வீதியின் சந்தி வரை. (ஈ) அளுத் மாவத்தை வீதியின் இருபக்கமும் அங்குள்ள சந்தி வரையும் அங் குள்ள சிறு பாதையும் கீழ் சாந்த அன்றூ பிரதேச சந்தி வரையாகும். | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2006.09.21 |
| 4 | இல. 3 பிரிவு மாதம்பிட்டிய (பர்கியூசன் வீதி) | பிரதேசம் இவ்வாறு எல்லைப் படுத்தப்பட்டுள்ளது. வடக்கு -பர்கியுசன் வீதியின் தெற்குப் பகுதியிலிருந்து சந்திவரையும், கிழக்கு லூகஸ் வீதியின் மேற்குப் பிரதேசத்திலிருந்து சந்திவரை, பர்கியுசன் வீதியும், மாதம்பிட்டி வீதியின் சந்திவரை தெற்கு மாதம்பிட்டி வீதியின் வடக்கு பகுதியி லிருந்து சந்திவரை, லூகஸ் வீதியின் சந்திவரை, மேற்கு-டேனியல் வீதியின் கிழக்குப் பிரதேசத் திலிருந்து சந்திவரை மாதம்பிட்டி வீதியும், ஹேனமுல்ல சிறு வீதியின் சந்திவரையாகும். | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2006.09.21 |

| (ஏ) தொடர் இல | (பீ) பிரதேசம் | (சீ) செயலகப் பிரதேசம் தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | (டீ) தவறணை திறக்கும் நேரம் | (ஈ) தவறணை மூடும் நேரம் | (எப்) கேள்விக்காக வைப்புச் செய்ய வேண்டிய பணம் ரூபா | (ஜீ) கேள்வி ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் | (எச்) விற்பனை செய்யும் தினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | இல. 3 பிரிவு மாதம்பிட்டிய | பிரதேசம் இவ்வாறு எல்லைப் படுத்தப்பட்டுள்ளது. வடக்கு- பர்கியுசன் வீதியின் தெற்குப் பகுதியிலிருந்து சந்திவரை, லூகஸ் வீதியும் நாகலகம் வீதியின் சந்திவரை, கிழக்கு - நாகலகம் வீதியின் தெற்குப் பிரதேசத்திலிருந்து சந்திவரை பர்கியுசன் வீதியும், மாதம்பிட்டி வீதியின் வடக்குப் பிரதேசத் திலிருந்து சந்திவரை நாகலகம் வீதியும் லூகஸ் வீதியின் சந்தி வரை மேற்கு-லூகஸ் வீதியின் கிழக்குப் பகுதியிலிருந்து சந்திவரை மாதம்பிட்டி வீதியும், பர்கியூசன் வீதி சந்தி வரையாகும். | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2006.09.21 |

9. மேலதிக விபரங்கள் கொழும்பு பிரதேச செயலகத்தினால் பெற்றுக்கொள்ளலாம்.

10. **குறிப்பு**.- 2006.09.21 ஆந் திகதிக்கு விற்பனையாகாத மதுபான குத்தகைத் தவறணை 2006.10.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.

காந்தி பெரேரா,
பிரதேச செயலாளர்,
கொழும்பு.

பிரதேச செயலகம்,
கொழும்பு,
2006, ஆவணி 18.

9-310/1

---

## வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளு தவறணைகள் குத்தகை விற்பனை - 2007

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும், 1983 ஆம் ஆண்டிலும் அதற்கு பிந்திய கால எல்லைகளிலும் இதில் காணப்படும் அட்டவணையில், குறிப்பிடப்பட்டுள்ள தவறணைக்கான குத்தகை கொடுத்தல் காலப்பகுதியில், இவ்வறிவுறுத்தலுக்கு, அமைய தனிநபர்களுக்கான சில்லறை விற்பனை குத்தகைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள், 2006.09.19 ஆந் திகதி, அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்தில் கேள்விப் பத்திரம் வலப்பனைப் பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) இத்தகவல்கள் அனைத்தும் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரம் கேள்விகள் யாவும் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்த ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

(இ) பிராந்திய பிரதேச செயலாளர் வழங்கிய கேள்விதாரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சியும், கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். கேள்விகளும் பெறுமதிமிக்க அத்தாட்சிப்பத்திரம், சமர்ப்பிக்கும்போது, கள்ளுத்தவறணைக்கான நிபந்தனைக்குட்பட்டவராக கேள்விகாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கேள்விகாரர் கீழ் காணும் அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ளவேண்டும்.

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை, எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.
(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிட்டு, சாட்சிகளின் அறிமுக அட்டையின் இலக்கத்தையும், விடயத்தையும் குறிப்பிடல் வேண்டும்.
(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள் மாற்றங்கள் செய்யப்படின் கேள்விகாரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு, உறுதிப்படுத்தல் வேண்டும்.
(iv) சிறப்புரிமைபெற்ற கேள்விகாரர்கள் தமது அறிமுக அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைக்குட்படாத பட்சத்தில், கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு பெறுமதி சான்றிதழ், ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிட்டு வலப்பனை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் பெறப்பட வேண்டிய கால எல்லைகளுக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் தபாலில் வலப்பனை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விகாரர்கள் வலப்பனை பிரதேச காரியாலயத்தில் சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தை ஏற்கவோ நிராகரிக்கவோ எமக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விகாரர் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் வலப்பனை பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட 3 மாத தவணைக்கு முறையாத பிணைப்பணமாக வலப்பனை பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப்பணம் நில்தண்டாஹின்ன இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்பு கணக்கில் எனது பெயரால் வைப்பு செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசோலையாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்படல் வேண்டும். தேவையான முத்திரைகளை செலுத்தி குத்தகைக்காரர் நிபந்தனைகளிலும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைக்கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகைமை உடையவர் ஆவார்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2006.10.17 ஆந் திகதி முற்பகல் 10.00 மணியளவில் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகை கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

கே. என். சுனந்த பியசிரி,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

வலப்பனை பிரதேச செயலகம்,
2006.08.16

*அட்டவணை*

***கள்ளு தவறணை***

| *இலக்கம்* | *தவறணையின் பெயர்* | *தவறணை நிறுவப்பட வேண்டிய இடம்* | *கேள்விப்பத்திரம் பெறப்படும் கால எல்லை* | *கேள்விப்பத்திர பிணைப்பணம்* |
|---|---|---|---|---|
| 1 | ஹரஸ்பெத்த | ஹரஸ்பெத்த கிராமம் | மு. ப. 10.00 | ரூ. 1500.00 |
| 2 | பதியபெலல்ல | பதியபெலல்ல கிராமம் | மு. ப. 10.00 | ரூ. 1000.00 |

9-340

## ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகைக்கு விற்றல் - 2007

(2007, சனவரி 1 ஆந் திகதி முதல் 2007, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில்)

2007, சனவரி 1 ஆந் திகதி முதல் 2007, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அனுமதிப்பத்திரங்கள் யாவும் தற்போது அமுலில் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடிய உரிய படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதலும் இணைக்கப்படுதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "................................... இலக்க .................. கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2006.09.26 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ஜா- எல பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்துக்குள் ஜா-எல பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2006.09.26 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் ஜா-எல பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை பெறத்தவறும் தவறணைகள் 2006.10.25 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு விற்பனையாகும். அப்போது ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களும் வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

7. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை ஜா-எல பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டபிளயு. ஏ. டபிள்யு. பிரேமபிரிய,
பிரதேச செயலாளர்,
ஜா-எல.

எனது இல. : ஜா/1/1/7/02
ஜா-எல பிரதேச செயலகம்,
ஜா-எல.
2006.08.16.

### அட்டவணை

| தொடர் இலக்கம் | பிரிவு | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கந்தானை | 2006.09.26-காலை 10.30 | 1,500 |
| 02. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | வலிகம்பிட்டிய | 2006.09.26-காலை 10.30 | 1,500 |
| 03. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கனுவனை | 2006.09.26-காலை 10.30 | 4,000 |
| 04. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | ஏகலை மெகொட | 2006.09.26-காலை 10.30 | 5,000 |
| 05. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | தண்டுகம | 2006.09.26-காலை 10.30 | 1,000 |

9-352

## பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை விற்பனை - 2007

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்குப் பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத்தவறணை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கும் அக் காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்கிணங்க 2007 ஆம் ஆண்டுக்குள் மதுபானம் (கள்ளு) சில்லறைக்கு விற்பனைக்கான வரப்பிரசாதங்களை விலைக்கு வாங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரமும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதாக இருப்பதோடு -

(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ் காணும் உப அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கேள்விப்பத்திர பணமாக வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரசீதையும் (ரிசிட்)

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி பூமி ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரதாரரின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும்.

கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்திசெய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விஷேட கவனம் செலுத்தப்படல் வேண்டும் ;

(i) கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்தில் மட்டுமல்லாது எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.

(ii) பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

3. முறையாகப் பூரத்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் -

(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணமாகச் செலுத்தி பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட ரசீதுடனும் ;

(ஆ) வருமானச் சான்றிதழோடும்

முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையின் வலதுபக்க மூலையில் "மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்" குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பேருவளை பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4. ஒவ்வொரு மதுபான விற்பனை நிலையத்திற்கான கேள்விப்பத்திரம் கோரப்படும் இறுதிநேரம் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந் நேரத்தில் சகல கேள்விப்பத்திரதாரர்களும் பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

5. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட கேள்விப்பத்திரதாரரை "தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திதாரர்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டபின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன் பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம் முற்பணமாக பேருவளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து மேற்குறிப்பிடப்பட்ட மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக் கட்டுப் பணமானது பணமாக அல்லது "வங்கியில் செலுத்தப்படுதற்காக" எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, இலங்கை வங்கி மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமோ அல்லது "பாதுகாப்புடைய காசோலை" என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்ய முடியாத மதுபான விற்பனை நிலையம் மீண்டும் 2006.10.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் இவ் வர்த்தமானிக்கு அமைவாக முன் வைக்கப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

யூ. டீ. சி. ஜயலால்,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2006, ஒகத்து 23.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்க வேண்டிய நேரம் | மதுபான நிலையம் மூடப்பட வேண்டிய நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப்பத் திரம் ஏற்றுக் கொள்ளபடும் இறுதிதினம் | மீண்டும் விற்பனை செய்யும் திகதி யும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கம உப பிரிவு எல்லைக்குள் | மு. ப. 11.00 முதல் பி.ப. 5.00 மணிவரை | பி.ப. 2.00 முதல் இரவு 8.00 மணிவரை | 2,000 | 2006, செத்தெம்பர் 18 ஆந் திகதி மு.ப.10.30 மணிவரை | 2006, ஒற்றோபர் 17 ஆந் திகதி மு.ப.10.30 மணி |

**முக்கிய குறிப்பு.**- 2007 ஆம் வருடத்திற்குள் தற்போது மதுபான நிலையம் அமைந்திருக்கும் இடத்தைப் பெற்றுத் தருவதாக உறுதி செய்யப்படமாட்டாது. புதியதொரு இடத்தில் மதுவிற்பனை நிலையம் திறக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

9-353

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 140, மகலேகொட, வேயன்கொட எனும் முகவரியில் வசிக்கும் வண்ணிஅச்சி கன்கானமலாகே ஜயசேன ஆகிய என்னால் பிரசித்த நொத்தாரிஸ் ஆறுமுகம் தவநேசன் மூலமாக இரண்டாம் குறுக்குத்தெரு, சூசைபிள்ளைகுளம், வவுனியா என்ற முகவரியில் வசிக்கும் ஜயலோசினி ராகவன் என்பவருக்கு வழங்கப்பட்ட இல. 5469 கொண்ட 1990.08.13 ஆந் திகதியுடைய விசேட அட்டோர்னி தத்துவத்தை இரத்துச் செய்கிறேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

மேலே சொல்லப்பட்ட ஜயலோசினி ராகவன் என்பவரினால் என் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கோ காரியத்திற்கோ நான் பொறுப்பேற்கமாட்டேன்.

வண்ணிஅச்சி கன்கானமலாகே ஜயசேன.

9-297

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு குடிவகைத் தவறணை குத்தகை விற்பனை - 2007

அரசினால் அனுமதிக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பிரதேச பிரிவுகளிலும் பொருத்தமான இடத்தில் 2007, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து 2006, திசெம்பர் 31 ஆந் திகதிவரை தனியுரிமைப்படி கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு ஏற்ப வெளிநாட்டு மதுபான வகைகள் (எமது நாட்டு தானியங்களினால் தயாரிக்கப்படும் மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்வதற்காக கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் காணப்படும் வெளிநாட்டு மதுபான விற்பனைத் தவறணை நிபந்தனைகள் :

(ii) மதுபான குத்தகை அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக தற்போதுள்ள நிபந்தனைகள் :

2. கொழும்பு பிரதேச செயலக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய மாதிரிப்பத்திரத்தின் மூலம் கேள்விப்பத்திரத்தை கீழே ‘F’ நிரலில் காட்டப்படும் ஒவ்வொரு தவறணைக்கும் நேராகக் காட்டப்படும் உரிய பணத்தை வைப்புச் செய்வதற்காக பிரதேச செயலகத்தினால் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன், பிரதேச செயலாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துரிமைச் சான்றிதழ் ஒன்றினையும் வைத்து அனுப்ப வேண்டும். பிரதேச செயலாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துரிமைச் சான்றிதழ் அச்சான்றிதழின் அட்டவணையில் குறிப்பிடப்படும். அத்துடன் அச்சான்றிதழை வழங்குவதற்காக கருத்திற்கொள்ளப்பட்ட எந்தவொரு சொத்தையும் விற்பனை

செய்யாதுவிட்டால் அச்சொத்துரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்ட தினத்திலிருந்து ஐந்து வருடங்களுக்கு ஏற்புடையது. குத்தகைக் காலம் முடிவடைய முன்னர் சொத்துரிமைச் சான்றிதழ் ஏற்புடைய காலம் முடிவடையும் பட்சத்தில் பூரண குத்தகைக் காலத்திற்கு புதிய சொத்துரிமைச் சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறில்லாவிடில் குத்தகைக் காலம் முடிவடையும் வரை எஞ்சியுள்ள காலத்திற்காக குறைநிரப்பு சொத்துரிமைச் சான்றிதழ் ஒன்றை குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது சமர்ப்பிக்க வேண்டும்.

3. கடித உறையிலிட்டு முத்திரை பதிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தையும் கொண்டுள்ள உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கொழும்பு பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் ........................ ஐக் கொண்ட வெளிநாட்டு மதுபான தவறணைக்கான கேள்விப்பத்திரம்-2006" எனக் குறிப்பிடப்பட வேண்டும். கேள்விப்பத்திரம் தவறணை பெயருக்கு நேராக கீழே குறிப்பிடப்படும் நேரத்திலும் தினத்திலும் கொழும்பு பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். கேள்விதாரர் கேள்வி பெற்றுக்கொள்ளும் கடைசி நேரத்தில் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

4. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் அந்நேரத்திலேயே வாங்குபவராக அறிவிக்கப்படுவதுடன் மேலே குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு மதுபான குத்தகை தவறணை நிபந்தனைகளுக்கு ஏற்ப விற்பனை நிபந்தனைப் பத்திரத்தில் கைச்சாத்திடுவதற்காக குறிக்கப்படும் பணத்தொகையை பிணையாக பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும்.

5. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தனது கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொண்டதாக அறிவித்ததும் குத்தகை விற்பனை நிபந்தனைகள் கைச்சாத்திடுதல் அல்லது குறிப்பிடப்படும் பிணைப்பணம் உரிய முறையில் வைப்புச் செய்தல் அல்லது தவறினால் அவர் வைப்புச்செய்த கேள்விப்பத்திர வைப்புப்பணம் கிடைக்காதுபோவதுடன், அவருடைய பெயர் மதுபானப் பத்திரங்களை வைத்திருப்போரின் குற்றவாளிகளின் பெயர்ப்பட்டியலில் இடம்பெற வாய்ப்புண்டு. வெற்றிபெற்ற கேள்விதாரரினால் முழுமையான பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்ட பின்னர் விற்பனை நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் டென்டர் வைப்புப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

6. எவ்வித காரணமும் காட்டாது ஒன்று அல்லது சகல கேள்விகளையும் மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. 2006 ஆம் வருடத்திற்கான வெளிநாட்டு மதுபான தவறணை வைத்திருக்கும் இடத்தையே பெற்றுக்கொள்ளலாம் எனக் கூறமுடியாது. வெற்றிபெற்ற கேள்விதாரரினால் உரிய பிரிவில் உரிய கட்டிடத்தை தேடிக்கொள்ள வேண்டி இருப்பதுடன், அக்கட்டிடம் சம்பந்தமாக மதுபானக் குத்தகை ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டிடங்களை வழங்குவதற்காக பிரதேச செயலாளர் கடமைப்படவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

8. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானத் தவறணை பட்டியல் கீழே காட்டப்படுகிறது :-

| A<br>தொடர் இல. | B<br>அனுமதிக் கப்பட்ட பிரதேசம் | C<br>பிரதேசத்தின் அதிகார எல்லை, தவறணை அமையவேண்டிய பிரதேசம் | D<br>தவறணை திறக்கும் நேரம் | E<br>தவறணை மூடும் நேரம் | F<br>கேள்விக்காக வைப்புச் செய்ய வேண்டிய தொகை ரூபா | G<br>கேள்வி பெற்றுக் கொள்ளும் கடைசி நேரம் | H<br>விற்பனை செய்யும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இல. 13 பிரிவு கோட்டை | (A) க்வீன் வீதியும் யோக் வீதியின் சந்திவரை, அச்சந்தியிலிருந்து உள்ள பேலி வீதிப் பகுதி<br><br>(B) கனல் ரோவும் பள்ளி வீதியின் சந்திவரை அச்சந்தியிலுள்ள யோக் வீதி மேற்குப் பகுதி<br><br>(C) யோக் வீதியும் ப்ளக்ஸ்டொப் வீதியின் சந்திவரை, அச்சந்தியிலிருந்து சதம் வீதியின் இரு பக்கங்களும், சர்ச் வீதியும் சதம் வீதியின் சந்திவரையும் அச்சந்தியிலிருந்து உள்ள க்வீன் வீதியின் கிழக்குப் பிரதேசம் | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2006.09.22 |
| 2. | இல. 2 பிரிவு முகத்துவாரம் | பிரதேசம் பின்வருமாறு எல்லைப் படுத்தப்பட்டுள்ளது- வடக்காக : அலுத் மாவத்தை வீதியும் மோதர வீதியின் சந்தி வரையும், அச்சந்தி | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2006.09.22 |

| A | B | C | D | E | F | G | H |
|---|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | அனுமதிக் கப்பட்ட பிரதேசம் | பிரதேசத்தின் அதிகார எல்லை, தவறணை அமையவேண்டிய பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விக்காக வைப்புச் செய்ய வேண்டிய தொகை ரூபா | கேள்வி பெற்றுக் கொள்ளும் கடைசி நேரம் | விற்பனை செய்யும் திகதி |
| | | யிலிருந்து மாதம்பிட்டிய வீதியின் தென் பகுதியும் ; கிழக்காக : சாந்த அன்றா பிரதேசமும் மாதம்பிட்டிய வீதியின் சந்திவரையும்,அச்சந்தி யிலிருந்து அலுத்மாவத்தை வீதியின் மேற்குப் பக்கமும் ; தெற்காக : சாந்த அன்றா வீதியும் அலுத்மாவத்தை வீதியின் சந்திவரையும் அச்சந்தியி லிருந்து கீழாக சாந்த அன்றா பிரதேசத்தின் வடக்குப் பக்கமும் ; மேற்கு : மலே வீதியும் கீழ் சாந்த அன்றா பிரதேச சந்திவரை, அச்சந்தியிலிருந்து சாந்த அன்றா வீதியின் கிழக்குப் பக்கமும் மாதம்பிட்டியவும் மலே வீதியின் சந்திவரையும் அச்சந்தியிலிருந்து மோதர வீதியின் கிழக்குப் பிரதேசமுமாகும். | | | | | |

9. மேலதிக விபரங்கள் கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

10. **குறிப்பு**.- 2006.09.22 ஆந் திகதி விற்பனையாகாத மதுபான தவறணைக் குத்தகை 2006.10.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.

காந்தி பெரேரா,
பிரதேச செயலாளர்,
கொழும்பு.

பிரதேச செயலகம்,
கொழும்பு,
2006, ஓகத்து 18.

9-310/2

---

## கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு மற்றும் அந்நிய குடிவகைக்கான தவறணைகள் குத்தகை கொடுத்தல் - 2007

1992, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983ஆம் ஆண்டினதும் அதற்குப் பின்னதுமான கால எல்லைக்குள் செல்லுபடியாகும் கள்ளுத் தவறணையினதும் வெளிநாட்டுக் குடிவகைகளையும் (தானியங்களைக் கொண்டு இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) தவறணைகளில் விற்பனை செய்வதை குத்தகைக்கு கொடுப்பதற்கானதும் அக்காலப்பகுதியில் செயற்படுத்தப்படும் சகல கலால் வரி குத்தகைக்கும் உட்பட்டு 2007 ஆம் ஆண்டிற்குள் கீழ்க்குறிப்பிடப்படும் உப அலகுகளில் காணப்படும் கள்ளுத் தவறணைகளிலும் வெளிநாட்டு குடிவகை சாலைகளினதும் (தானியங்களைக் கொண்டு இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) சில்லறை விற்பனையில் தனியுரிமை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக கொத்மலை பிரதேச செயலாளர் மூலமாக 2006.09.14 ஆந் திகதி கீழ்குறிப்பிடப்படும் உப அலகுகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நேரம் வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) சகல கேள்விப் பத்திரங்களும் இத்தீவின் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரினால் வழங்கிய கேள்விக்காரரின் சொத்துக்கள் உட்பட அசைவற்ற சாதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சியும் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். கேள்விகளும் பெறுமதிக்கான அத்தாட்சிப் பத்திரமும் சமர்ப்பிக்கும்போது கள்ளுத் தவறணைகளும் வெளிநாட்டு குடிவகை சாலைகளினதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களாக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கீழ்க்காணும் விடயங்களை கேள்விக்காரர் கருத்தில் கொள்ள வேண்டும்–

(1) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(2) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சிகளினதும் ஆள் அறிமுக அட்டை இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள் மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

4. சிறப்புரிமை பெற்ற கேள்விக்காரர்கள் தமது ஆள் அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகளை இரத்துச் செய்யப்படும்.

5. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச்செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரை இடப்பட்ட உரையின் மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிட்டு பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் பெறப்படவேண்டிய கால எல்லைக்குள் பதிவுத் தபாலில் இடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகள் சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவுத் தபாலில் கொத்மலை பிரதேச செயலாளருக்கு அனுப்ப வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப் பத்திரத்தையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் கொத்மலை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட மூன்றுமாத தவணைக்குள் குறையாத பிணைப்பணமாக கொத்மலை பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் புஸ்ஸல்லாவ - இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக் கணக்கில் எனது பெயரில் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசோலையாகவோ அல்லது இலங்கை வங்கி, மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் காசோலை மூலமாகவோ செலுத்தப்படல் வேண்டும். தேவையான முத்திரைகளைச் செலுத்தி குத்தகைக்காரர் நிபந்தனைகளையும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

6. நியமிக்கும் தவணைக்கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் தகைமை உடையவராவார்.

7. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2006.10.13 ஆந் திகதி மு. ப. 10.00 மணியளவில் விற்பனை செய்யப்படும்.

9. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமாக முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

10. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஜானக தர்மகீர்த்தி,
பிரதேச செயலகம்,
கொத்மலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கொத்மலை,
2006.08.23.

**அட்டவணை**

| | இடமும் பெயரும் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் காலம் | கேள்விப்பத்திரம் பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 1. | கடதொறபிட்டிய | கடதொறபிட்டிய கிராமம் | 2006.09.14 மு. ப. 10.30 | ரூ. 1,000.00 |
| 2. | ஒத்தலாவ | கேள்விப்பத்திர மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற இடம் பிரதேச செயலாளர் அவர்களின் அனுமதியைப் பெறுதல் வேண்டும். | 2006.09.14 மு. ப. 10.30 | ரூ. 1,000.00 |
| 3. | கட்டுககித்துல | கட்டுககித்துல கிராமம் | 2006.09.14 மு. ப. 10.30 | ரூ. 1,000.00 |

**வெளிநாட்டுக் குடிவகை தவறணை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பூண்டுலோயா | மேட்டுக்கடை வீதி, பூண்டுலோயா | 2006.09.14 மு. ப. 10.30 | ரூ. 3,000.00 |

9-356

---

## அம்பகமுவ கோரளையில் உள்ள கள்ளுத் தவறணைகள், வெளிநாட்டுக் குடிவகைகள் - 2006/2007 ஆம் ஆண்டிற்கான குத்தகைக்குக் கொடுத்தல்

1982 ஆம் ஆண்டு ஓகத்து 20 ஆந் திகதி 207 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும் 1983 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்திய காலஎல்லைக்குள் இதில் காணப்படும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தவறணைகள் குத்தகைக்குக் கொடுத்தல் 2006/2007 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் நிபந்தனைகளுக்கமைய கள்ளு, வெளிநாட்டுக் குடிவகைத் தவறணைகள் (தானிய வகைகள் கொண்டு இந்நாட்டில் தயாரிக்கப்படும் குடிவகையுட்பட) தனி நபருக்கான சில்லறை விற்பனைக் குத்தகை கொடுப்பனவிற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வரை அம்பகமுவ பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2\. (அ) இத்தீவின் பிரதேச செயலகத்தில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) பிராந்திய மேலதிக அசராங்க அதிபரால்/பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்வித் தாளில் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்போது கள்ளுத் தவறணைகளினதும் வெளிநாட்டுக் குடிவகைக் குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும்.

(இ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(ஈ) கேள்விப் பத்திரம் நிரப்பும் போது கேள்விக்காரர் கீழ்காணும் முக்கியத்துவங்களை கருத்திற் கொள்ள வேண்டும் :-

(1) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(2) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரம் கையொப்பமிடும் சாட்சிகளினதும் ஆள் அறிமுக அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

(3) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(4) சிறப்புரிமை பெற்ற கேள்விக்காரர்கள் தமது அறிமுக அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3\. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடது மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிட்டு அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கேள்விகள் பெறப்பட வேண்டிய கால எல்லைக்குள் போடப்பட வேண்டும்.

தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவுத் தபாலில் அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ் வரும் கால எல்லையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ மறுக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் அம்பகமுவ பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட மூன்று மாத விற்பனைக்குக் குறையாத பிணைப்பணமாக அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் கினிகத்ஹேன மக்கள் ஒருவருடைய நிரந்தர சேமிப்புக் கணக்கில் எனது பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப் பணம் காசோலையாக அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும். தேவையான முத்திரைகள் செலுத்தி குத்தகைக்காரர்கள் நிபந்தனைகளிலும், ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைக் கட்டணம் மாதாந்தக் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாகச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

9. மேற்படி குத்தகை தவறணைகள் கொடுக்கப்படாத தவறணைகள் 2006.09.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைககு கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் அம்பகமுவ பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

எஸ். எம். நந்தசேன,
பிரதேச செயலாளர்/அம்பகமுவ கோரளை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
2006, ஓகத்து 17.

**அட்டவணை**

| இலக்கமும் தவறணையின் பெயரும் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப் பத்திரம் பெறப்படும் காலஎல்லை | பிணைப் பணம் ரூபா |
|---|---|---|---|
| 01 நோர்வூட் | நோர்வூட் நகர எல்லையில் 3ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2006.09.18-மு. ப. 10.30 | 3,000 |
| 02. டிக்கோயா | ஹட்டன், டிக்கோயா நகர எல்லையில் 4ஆம் இலக்க வட்டாரத்திற் குட்பட்ட பிரதேசம் | 2006.09.18-மு. ப. 10.30 | 3,000 |
| 03. டிக்கோயா | ஹட்டன், டிக்கோயா நகர எல்லையில் 5ஆம் இலக்கத்திற்குட்பட்ட பிரதேசம் | 2006.09.18-மு. ப. 10.30 | 3,000 |

9-435

# ஏல விற்பனைகள்

## ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் - காலி கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழான ஏல விற்பனை*

### பெறுமதிமிக்க ஆதனம் ஏலவிற்பனை

தென் மாகாணம், காலி மாவட்டம், வெல்லபட பத்துவில், அளுத்வல வில் அமைந்துள்ள "ஹேர்மன் எஸ்டேட்" என அறியப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. டி. யூ. கருணாரத்னவால் தயாரிக்கப்பட்ட 1996.10.10 ஆந் திகதிய 2256 ஆம் இலக்க பிரிவிடல் வரைபடத்துக்கு அமைய அதன் D2 எனும் காணித்துண்டின் பிரித்து வேறாக்கப்பட்ட $D2^2$ எனும் காணித்துண்டு (விஸ்தீரணம் : 3 ஏக்கர்) அதில் அமைந்துள்ள சகலவற்றுடன் ஈடுவைத்தவரும் கடப்பாடுடைய வருமான காரியவாசம் தந்திரிகே ஆரியபால என்பவர், பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். எஸ். மரிக்கார் அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1997.01.22 ஆந் திகதிய இல. 6982 ஆம் இலக்கம் கொண்ட முறிமீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய வங்கிக்கு வருமதியாயுள்ள முழு கடன் தொகையை அனைத்து செலவுத் தொகையுடன் சேர்த்து அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஆதனத்தை 2006 செத்தெம்பர் 26 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2005, நவெம்பர் 11 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2005, 11. 16 ஆந் திகதிய 'திவயின', 'ஐலண்ட்',மற்றும் 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் தயவுசெய்து பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனை முடிவில், வெற்றிகரமான கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூர் அதிகாரி சபைக்கு உரிய வரி ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக, கொள்வனவு விலையின் இரண்டரை வீதம் (2 1/2%) ;
(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தற்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) எழுதுவினைஞர், கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) மொத்த விளம்பரச் செலவு.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ, ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கியில் வைப்பிலிட வேண்டும்.

காணி உறுதி மற்றும் தொடர்புடைய வேறு ஆவணங்கள் சம்பந்தமான மேலதிக விவரங்களை "வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி (காலி கிளை) முகாமையாளரிடம்" அல்லது "வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி (தலைமை அலுவலகம்), கடன் கண்காணிப்பு அறவிடல் பிரிவு, பிரதம முகாமையாளர்" இடம் இருந்து பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

தொலைபேசி இல. 2661815/ 2661816.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
ஜே. பீ. (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

9-357

---

## மக்கள் வங்கி-வெலிகம கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்துக்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் என்னால் கீழ் குறிப்பிட்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள் 2006.09.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**சொத்துக்கள் பற்றிய விவரணம் :**

(1) தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெலிகம் கோரளேயில் ஊருவிடிகேயில் அமைந்துள்ள தென்சாலி மவுன்ட் தோட்டம் என்ற காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 6 என்ற இருபத்தாறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 26பே.) எனும் மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்து பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் அடங்கலாக.

(2) மேலே கூறப்பட்ட ஊருவிடிகேயில் அமைந்துள்ள தெற்கு சாலிமவுன்ட் தோட்டம் எனும் காணியை பிரித்து வேறாக்கப் பட்ட இலக்கம் 61 என்ற இருபத்தொன்பது தசம் ஒரு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 29.1பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அங்குள்ள அனைத்து பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் அனைத்துமாகும்.

2000.12.29 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட "தினமின", "தினகரன்", "டெய்லிநியூஸ்" போன்ற பத்திரிகைகளிலும் 2001.12.20 ஆந் திகதியில் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை அறிவித்தல் பகுதியையும் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- வெலிகம அகுரெஸ்ஸ பாதை யில் ஊருவிடிகே பிரதேசத்தின் வீதியில் எல்லையாக சாலிமவுன்ட் தோட்டம் என்ற இக்காணி அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தவேண்டிய முறை.**- எலவிற்பனை தீர்ந்து விட்டதும், வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் கீழ் குறிப்பிடு கின்றபடி காசாக செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1% ;

(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூ. 500 ;
(5) விற்பனைச் செலவும், இதர செலவுகள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரம் என்பவற்றுக்கான முத்திரைக் கட்டணமும் ஆகும்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி மாத்தறை பிரதேச பிரதான அலுவலகத்தில் பிரதேச முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கம் 041-2222792, 2222822, 2224773. பெக்ஸ் இலக்கம் - 041-2222688

உரிமைகோரும் ஒப்பினையையும் வேறும் விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். மேலே குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் தற்போதைக்கும் செலுத்திய கொள்வனவு விலையில் 10%க்கான பணத்தை மீண்டும் செலுத்தாதுவிடவும், மீண்டும் அச் சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. 041-2228731

9-397

---

## கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்-புறக்கோட்டை கிளை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அதிகாரிபத்து சியண கோரளையில் அம்பத்தலன் பால் கொடிக்காவத்தை - முல்லேரியாவ பிரதேச சபை எல்லைக்குள் கொல்வத்த கிராமத்தில் அமைந்துள்ள "துவவத்த" என்ற காணியும் அதில் அமைந்துள்ள கட்டிடம் எல்லாம் சேர்த்து நில அளவையாளர் கே. டி. சரத் ரத்ணாயக்கவின் 16.10.1999 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 3083 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய காணித்துண்டான லொட் ஜி 1ஏ எனும் காணியின் (விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 1.19பே.)

மேற்படி கொயிலவத்த கிராமத்தில் அமைந்துள்ள துவவத்த என்ற காணியின் வரைபடம் இலக்கம் 3083 இல் காண்பிக்கப்பட்ட லொட் ஜி1பி இக்காணியில் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 5.01பே. அமைந்துள்ள எல்லாம் சேர்த்து
ஏலவிற்பனை

**ஏலவிற்பனைத் திகதியும் நேரமும் :**

*0ஏ. 0றூ. 1.19 பேர்ச் காணி ஆதனம்-28.09.2006 மு. ப. 11.30*
*0ஏ. 0றூ. 5.01 பேர்ச் காணி ஆதனம்-28.09.2006 மு. ப. 11.45*

*(கடன் எடுத்த ஆஜி டிரேடர்ஸ் என்ற பெயரில் பங்குதாரர்களாக வியாபாரம் செய்யும் முஸ்தாக் காண் மற்றும் மொஹமட் ரயுமி காசிம் என்பவர்கள் மேற்படி காணியை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்துள்ளனர்).*

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

தீர்மானம் பற்றிய விபரங்களுக்காக தயவுசெய்து 30.05.2003 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும் மற்றும் 02.06.2003 ஆந் திகதியுடைய "லங்காதீப", "த ஐலண்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 08.09.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும், "லங்காதீப", "த ஐலண்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கு செல்லும் விதம்.-** கொழும்பு - கடுவெல வீதியூடாக கொடிக்காவத்தை சந்திக்கு சென்று அதன் பிறகு கொத்தட்டுவ புதிய நகரம் மற்றும் ஐ. டி. எச். க்கு செல்லும் பாதையில் சென்று ஒரு மைல் தூரம் இந்த வீதியால் சென்று கொலன்னாவ மற்றும் ராஜகிரிய ஊடாகவும் கொத்தட்டுவக்கு சென்று இக் காணியை காண முடியும்.

**கொடுப்பனவுகள் செலுத்தும் விதம்.-** ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமான கொள்வனவு விலையின் 2.5% ;
(4) விற்பனைப் பத்திரத்தை தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்கான செய்யப்பட்ட விளம்பரச் செலவுகள் ;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி பிரதான கிளையில் செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் மற்றும் தொடர்பு ஆவணங்களையும் பின்வரும் இடத்தில் பெற முடியும் :

முகாமையாளர்,
கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்
இலக்கம் 180/1/31
பீபல்ஸ் பாக் சொப்பிங் கொம்ப்லெக்ஸ்
கொழும்பு 11

தொலைபேசி: 2388295, 2446290, 4712643
பெக்ஸ் 2449594

எச். பி. சேனநாயக்க,
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுவோர், கொழும்பு மாவட்டம்
மற்றும் வர்த்தக மேல் நீதிமன்ற ஆணையாளர்
அரசாங்கம் மற்றும் வர்த்தக வங்கிகளின்
உத்தரவுபெற்ற ஏலதாரர்

இல. 99, புதுக் கடை வீதி,
கொழும்பு 12.
25.08.2006,

தொலைபேசி/பெக்ஸ் 2445393,

9-419

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 106/99

*(மந்தாரம்நுவரவில் அமைந்துள்ள ஹய்போரஸ்ற் மினரல் வாட்டர் கம்பனியின் பங்குதாரரான கலே கோறலால கெதர உபாலி ஜயசூரிய அவர்களுக்குச் சொந்தமான ஆதனம்)*

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 14.10.2005 ஆந் திகதிய 1415 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 07.10.2005 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, ரொறிங்ரன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர்கள் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் 11.10.2006 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படு மெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், உடஹேவாஹெற்ற பிரிவில், உடகம்பஹா கோறளை, ஹுனுகொட்டுவ கிராம சேவை யாளர் பிரிவில், மந்தாரம்நுவர கிராமத்தில் அமைந்துள்ள, கண்டி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.எம்.எச். நவரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1998, ஒற்றோபர் 27 ஆந் திகதிய 13017 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள, "மந்தாரம்நுவர வத்த" என்றழைக்கப்படும் மேற்குறிப்பிட்ட 13017 ஆம் இலக்க வரைபடம், அறிக்கைக்கிணங்க- வடக்கில் : அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட பிபி.என்யூ. 153 ஆம் இலக்க வரைபடத்தின் 86 ஆம் துண்டும் ; தெற்கில் : நீரோடைக்கான ஒதுக்கமும் ; கிழக்கில் : அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட பிபிஎன்யு. 153 ஆம் இலக்க வரைபடத்தின் 84, 83 ஆம் துண்டுகளும் ; மேற்கில் : ஒதுக்கமும் குட்வுட்டிலிருந்து பதியபலல்லவிற்குச் செல்லும் றோட்டும் எல்லை களாகக் கொண்ட ஒரு ஏக்கர் ஏழு பேர்ச்சுகள் (1ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள ஸ்வர்ணபூமி காணித்துண்டு முழுவதும். அதற்குள் உள்ள அனைத்துமாகும். இது நுவரெலியா மாவட்டக் காணிப்பதிவகத்தில் யூஎச்இ. 9/371/93 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டி. ஏ. தயானந்த,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பதியபலல்ல கிளை.

9-425

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 2246/2002

*(இல. 136, நியூ கிறவுண், ஹத்தறலியத்த என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. மொஹொமட் றபீக் மொஹமட் றிஷாட் (1/3, தெஹிதெனிய மடிகே ஹத்தறலியத்த) மற்றும் இல. 5, கெற்றவல, லேஉல என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. அகல கொட்டுவே வலவ்வே பிரேமசிறி திசாநாயக்க*

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 24.09.2004 ஆந் திகதிய 1360 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 13.09.2004 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, ரொறிங்ரன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் 29.09.2006 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படு மென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், தும்பனை, பள்ளே பளாத்த கோறளை, தெஹிதெனிய மடிகே இல் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். நவரத்ன பண்டா அவர்களால் தயாரிக்கப் பட்ட 2000.03.03 ஆந் திகதிய 2345 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள, "மஹாறம்பே பறன கெதற வத்த" என்றழைக்கப்படும் வடக்கில் : கொற்றம்பேயிலிருந்து அம்பாவ பெருந்தெருவிற்குச் செல்லும் றோட்டும் ; கிழக்கில் : வீடுகளிற்குச் செல்லும் றோட்டும் ; தெற்கில் : மஹாறம்பவும் கப்புகொட்டுவவும் ; மேற்கில் : வீடுகளிற்குச் செல்லும் றோட்டும் எல்லைகளாகக் கொண்ட, ஒரு றூட் பதினொன்று தசம் ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 11.7பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள, காணி முழுவதும் அதற்குள் அமைந்துள்ள கட்டடங்கள், பயிர்கள் மற்றும் அனைத்து மாகும். இது கண்டி காணிப்பதிவகத்தில் கே 348/27 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. எம். யூ. பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்றரக் கிளை,
கண்டி.

9-426

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 130110

*("பிரியங்கனி நிவச, மெனிக்திவெல" என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஜயசுந்தர முதியன்சேலாகே சஞ்சீவ்குமார ஜயசுந்தரவிற்குச் சொந்தமான காணி)*

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 29.10.2004 ஆந் திகதிய 1365 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 18.10.2004 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, ரொறிங்ரன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் 04.10.2006 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனிஹத்பத்து, உடபொல, மெதலஸ்ஸ கோறளை, கலுஹெந்திவெலவில் அமைந் துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் P. B. திசாநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999.03.07 ஆந் திகதிய 2580 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள "இஹல கெதரவத்த" என்றழைக்கப்படும் வடக்கிலும் வடகிழக்கிலும் : R. H. H. சந்திரசேகர வினால் சொந்தம் கொண்டாடப்படும் காணியும் ; தென்கிழக்கில் : உக்குபண்டாராச்சியினாலும் வேறு நபர்களாலும் சொந்தம் கொண்டாடப்படும் வயலும் ; தெற்கில் : தற்பொழுது எச். எம். விஜித்த கலு ஹெந்திவெலவினால் உரித்துக் கொண்டாடப்படும் காணியும், மேற்கில் மேற்குறிப்பிட்ட 2580 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ள றோட்டும் தற்பொழுது ஹேமகீர்த்தியினால் சொந்தம் கொண்டாடப்படும் வயலும் எல்லைகளாகக் கொண்ட ஒரு றூட் முப்பது தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 30.5பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணி முழுவதும், அதற்குள் உள்ள அனைத்து மாகும். இது குருநாகலை காணிப்பதிவ கத்தில் F 1220/145 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. எம். உபதிஸ்ஸ பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்றரக் கிளை,
கண்டி.

9-427

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.